TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் X.] MAY, 1910-௵ மே௴. [இலக்கம் 2.

யானையின் புத்திக்கூர்மை.

இராயல் சொசைட்டி ஆப் ஆர்ட்ஸ் என்கிற சபையின் பத்திரிகையில் ஒரு விசித்திரமான சம்பவம் குறிக்கப்பட்டிருக்கிறது. ஒருவரால் விற்கப்பட்ட பல சாமான்களிலொன்றாகிய ஓர் பெண்யானையை, அது யானைகளைப் பிடித்துக் கொடுக்கும் குணமுள்ளதென்கிற சமாசாரத்தைச் சிறிதும் அறியாமல் மற்றொருவர் வாங்கிவிட்டார். யானைப்பாகன் அபாயமான வேலையினின்று விடுதலையானதற்கு மிகச் சந்தோஷப்பட்டு அந்த மிருகத்தின் உண்மையான குணத்தைத் தன் புது எஜமானனுக்குச் சொல்லாமல் இருந்துவிட்டான். அந்த யானைக்கு இலட்சுமி யென்று பெயர். ஒருநாள் காலை இலட்சுமி காணப்படவில்லை. சங்கதி யொன்றும் தெரியாமல் அநேக நாள்கள் கழிந்ததினால் அதைக் காணோமென்று கைவிட்டு விட்டார்கள். ஒருவாரத்திற்குப் பிறகு ஒரு நாள் யாதொன்றும் நிகழ்ந்திராததுபோல இலட்சுமி கண்ணுக்குப் புலப்பட்டது. அதன் எஜமானன் மறுநாள் அதன்பேரில் சவாரி செய்யப் போனான். அவன் ஒரு காட்டைத் தாண்டிப் போகவேண்டியிருந்தது. யானை பலதரம் காட்டுக்குள்ளே போக எத்தனித்தும், யானைப்பாகன் அது போகிறவழியே விட்டால் அபாயம் நேரிடுமென்று பயந்து அதைக் காட்டுக்குள் போகவொட்டாமல் திருப்பித் திருப்பிப் பார்த்தான். கடைசியாக இலட்சுமியைக் கட்டிப் பிடிக்கமுடியவில்லை. அது காட்டுக்குள்ளே ஓடி ஓர் அடர்ந்த தோப்பில் நின்றது. அங்கே இரவில் இந்த யானையை முன் சங்கிலிகளால் கட்டிவைப்பது வழக்கமாம். அவ்விடத்தில் ஒரு பெரிய ஆண் யானையானது தன் கால்களைச் சங்கிலிகளால் மரங்களில் கட்டப்பட்டு நின்றதைப் பார்த்து எஜமானன் அதிக ஆச்சரியமடைந்தான். அப் பெண்யானை தன் பழைய தொழிலை நினைத்துக்கொண்டு தான் பலநாள் காட்டில் திரிந்து அவ் வாண் யானையை ஏமாற்றி அவ்விடம் கொண்டு வந்து கட்டிவிட்டது. இவ்விதமாய் அதன் எஜமானனுக்கு அநேக வருஷகாலமாக அகப்படாத ஒரு சிறந்த யானை கிடைத்தது.

பீரங்கிப் பட்டாளங்களோடு போகும் போது யானைகள் மிக உபயோகமான வேலைகளைச் செய்கின்றன. மண் குழியிலிருந்தாவது சதுப்பு நிலத்திலிருந்தாவது பீரங்கிகளைக் கிளப்ப எருதுகளால் முடிகிறதில்லை. யானையோ ஒரு பீரங்கி கீழே அமுங்கிப் பாழாய்க் கிடக்கும்பொழுதுதான் ஒரு தேர்ந்த எஞ்ஜினியரைப்போ லருகிற் போய் அங்கே யிருக்கிற நிலைமையைக் கருத்தாய் உற்று நோக்குகிறது. தன் தும்பிக்கையை ஒரு சக்கரத்தின் வட்டையில் சுற்றிக் கொண்டு பூமியின் ஆழத்தையும் அழுத்தத்தையும் அறிந்துகொள்வதுபோல ஒருதரம் தூக்கிப் பார்க்கும். பிறகு அதேமாதிரி மற்றொரு சக்கரத்தண்டை போய் அதையும் தூக்கிக் கீழே விட்டுவிட்டு ஒருதரம் கண் சிமிட்டல் செய்கிறது. அதைப் பார்த்தால் ‘‘எல்லாம் சரிதான் இதைக் கிளப்பிவிடலாம்’’ என்று சொல்வதுபோலிருக்கிறது.

சில நிமிஷம் யோசித்து, இதைத் தூக்குவதற்குச் சரியான வழி இதுதான் என்று அறிந்து தன் முகத்தைப் பீரங்கிவாயில் முட்டிப் பிளிறுகிறது. இந்தத் தொனியினால் பீரங்கியில் கட்டியிருக்கிற எருதுகளும் சேர்ந்து இழுக்கவேண்டுமென்கிற கருத்து புலப்படும். அவைகள் அப்படியே யானைக்கு அடங்கி யானையுடன் இழுக்கின்றன. இவ்விதம் செய்துதான் சாதாரணமாய் யானை புதைந்த பீரங்கிகளை இழுப்பது வழக்கம். ஆனால் எருதுகள் முரட்டுத்தனமாய்க் குறிப்பை அறிந்து நடக்காதபக்ஷத்தில் யானை உடனே கோபங்கொண்டு அவைகளின்பேரில் பாய்ந்து தன் தும்பிக்கையால் அடித்துக் கீழ்ப் படியச் செய்கிறது.

சாதாரணமாய் யானைகள் ஆற்றோரங்களுக்குப் போகும்போது ஆற்றங்கரையின் மண்ணுறுதியைப் பார்த்துக்கொண்டுதான் தன் பாரம் முழுமையும் அந்தக் கரையில் ஊன்றிக் கால்வைக்கும். இதுபோலவே மாப்பாலத்தில் போகும்போதும் வாராவதியின் திடத்தை அறிந்துதான் செல்லும். யானைகள் நன்றாய் நீந்தும், வெள்ளம் வரும் காலத்தில் யானைகள் ஐராவதியாற்றை நீந்திக் கடப்பதைப் பார்த்திருக்கிறார்கள். மிகப் பூர்வீக அனுபோகமுள்ளவராகிய எலியன் என்பவர், அப்படிப் போகும் யானைகள் தங்கள் தந்தத்தின்மேல் தம் குட்டிகளையும் தூக்கிக் கொண்டு போகின்றனவென்று சொல்லுகிறார். அவைகள் சுயேச்சையாய்க் காட்டில் திரியும்போது அவைகளின் புத்திக்கூர்மை தெரிகிறதில்லை. மிகக் கபட மற்றவைகளாகக் காணப்படுகின்றன. காட்டில் ஆகாரத்திற்குக் குறைவில்லை. ஆகையால், தங்களுடைய தந்திரத்தை உபயோகிக்கச் சமயம் ஏற்படுகிறதில்லை.

கர்னல் போலக் என்பவர் அநேகந்தடவைகளில் யானைகள் அதிக ஜாக்கிரதையாய் மரக்கட்டைகளின் பாரத்தைச் சீர்தூக்கிப் பார்க்கின்றனவென்றும், அதை எல்லோரும் பார்த்துச் சந்தோஷிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார். யானை தன் தும்பிக்கையால் ஒரு பாகத்தைத் தூக்கி, உடனே முழுமையும் தூக்கிவிடலாமென்று தோன்றினால், மரத்தின் சரிபாதியில், கீழே குனிந்து மரக்கட்டையைத் தன் தும்பிக்கையால் உருட்டிக் கொண்டுபோய்விடும், அல்லது வாளரி யந்திரத்தின் அருகிலாவது கொண்டுபோய்ப் போட்டுவிடும். ரங்கோன், மோல்மீன் என்கிற இடங்களிலுள்ள வாளரி யந்திரசாலைகளில் யானைகள் தினந்தினம் வேலை செய்வதை எவ்விடத்திலும் நன்றாய்க் காணலாம்.

தேத் தோட்டங்களில் கட்டடங்கள் கட்டுவதற்குச் செங்கல் கொல்லற்றுக்காரருக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதற்கு யானைகளை உபயோகப்படுத்துவதுண்டு. சுவர் அதிக உயரமில்லாவிடின் யானைகளே கற்களைக் கொண்டுபோய்ச் சரியான விடத்தில் வைத்துச் சுவரெழுப்புவது முண்டு. இலங்கை யானையொன்று இவ்விதமாய்க் கற்களை அடுக்கிச் சுவரெழுப்புவதும், ஓவர்சியர் வந்து பார்த்துச் சரியென்று சொன்னபிறகு புது வேலை தொடங்கிச் செய்வதும் வழக்கம். ஒரு தடவை ஓவர்சியர் வந்து பரீட்சிக்கும்போது அந்த யானை சுவரின் ஒரு பாகத்தை மறைத்துக்கொண்டு, பார்க்கவொட்டாமல் நின்றது. ஆனால் ஓவர்சியர் பார்க்கவேணுமென்று பிடிவாதமாய் நிற்க, யானைக்குச் சரிப்படாமல் அந்த பாகத்தைமட்டும் அந்த க்ஷணத்தில் அவருக் கெதிரிலேயே தான் நன்றாய்க் கட்டவில்லையென்று நினைத்துக் கீழே இடித்துத் தள்ளிவிட்டது.

வீட்டிலே பழகின பிராணிகளில்மட்டுந் தான் புத்திக்கூர்மையான திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன வென்பதில்லை. பர்மா புகைக் கப்பல் மாலுமி யொருவன் கரைக்குக் கொஞ்சதூரத்தில் நங்கூரம் பாய்ச்சி யிருக்குங் கால், தாய் யானையும் அதன் குட்டியும் தினந்தோறும் காலையில் காட்டிலிருந்து வெளியே வந்து சமுத்திரத்தில் ஸ்நானம் செய்துவிட்டுப் போவதையும், சின்னகுட்டி ஆழமில்லாத இடத்தில் நின்றுகொண்டு ஸ்நானம் செய்வதும், தாய் யானை கொஞ்சதூரம் ஆழத்தில் போய் முழுகுவதும் அவர் பார்ப்பது வழக்கம். ஆனால் ஒருநாள் காலை தாய் யானை பார்க்காமலிருக்கும்போது, குட்டி தான் செல்லவேண்டிய ஆழத்துக்கப்பால் சென்றதினால் பயப்பட்டு, திரும்பிவர முடியாமல் தன் தாயை உதவிசெய்ய அழைத்தது. அப்பொழுது தாய் யானை தன் குட்டியைக் கரையில் இழுத்துச் சேர்த்து, தன் தும்பிக்கையால் அதை அடித்தது. அன்று

முதல் தினம் தன் குட்டியைக் கரையிலேயே நிற்கும்படிச் செய்து தான் ஜலத்திலிறங்கி முழுகிவிட்டுப் பிறகு குட்டிக்குத் தும்பிக்கையால் ஜலம் கொணர்ந்து குளிப்பாட்டிக்கொண்டு வந்தது.

மிருகபாஷை.

மிருக பிராணிகளின் செய்கைகளைக் கூர்மையாய்ப் பார்த்திருக்கிறவர்கள், அவை ஒன்றுக்கொன்று பரிசக்குறிப்பினாலும் ஒலிக்குறிப்பினாலும் தங்கள் உட்கருத்தைத் தெரிவிக்கின்றன என்று சொல்லுகிறார்கள். யானைகள் கோபத்தினால் பிளிறி, கரடி புலிகள் மூர்க்கத்தினாலாவது பசியினாலாவது உறுமிக் கர்ச்சித்து, எருது அழைக்கிறதற்காவது சண்டைக்காவது முக்காரம்போட்டு, பசுக்கள் ஆகாரம் வேண்டியும் கன்றுகளை நினைத்தும் கூப்பிட்டு, குதிரை தெரிந்துகொண்டதற்கு அடையாளமாகவும் சந்தோஷக்குறிப்பாகவும் இரைக்காகவும் கனைத்து, நாய் நரிகள் பயமுறுத்தும்படிக் குரைத்து ஊளையிட்டு, தவளை மழைக்காகக் கத்தி, பாம்புகள் சினங்கொண்டால் சீறி, சேவல் விடியலைக் காணும்போதும் சண்டைக்கு முயலும்போதும் கொக்கரித்து, பட்சிகள் சந்தோஷத்தால் பாடி, இவ்வாறு நானாவிதமாக ஓசை செய்தல், அவ்வவற்றிற்குரிய சுபாவ குரல்கள்:—சில சில மிருகங்கள் தங்கள் தங்கள் கருத்துகளைச் சமயத்துக்குத் தக்கபடி விசேஷித்த குறிகளாலும் ஓசைகளாலும் தெரிவிப்பது மிருகபாஷை என்னப்படும்.

ஓர் ஊரிலே இரண்டு துரைமாரிடத்தில் பலத்த பெரு நாய்கள் இரண்டு இருந்தன. அவற்றில் ஒன்றை ஒன்று கண்டால் சண்டைபோடாமல் போகிறது அரிது. அவற்றுள் பழக்கின நாயைப் பட்டணத்திலிருக்கிற மளிகைக் கடைக்குக் கழுத்திலே சீட்டு கட்டி அனுப்பினால், மளிகைக்காரன் சீட்டில் கண்ட பதார்த்தங்களை அதன் கழுத்தில் ஒரு மூட்டையாகக் கட்டி விட்டுவிட, அதனுடனே அது வீட்டுக்குப் போகும்; திரும்புகாலில் பட்டணத்தின் தெருக்களில் அலைகிற நாய்கள் அப்பண்டங்களைப் பறித்துக் கொள்வதற்காக எதிர்த்துக் கடித்து அதற்குப் பொறுக்கக்கூடாத கோபம் மூட்டி வந்தன.

ஒருநாள் அது வரும்போதே பிரத்தியக்ஷமாய்க் கோபத்தோடு வந்து எஜமானன் மூட்டையை அவிழ்த்துக்கொள்ளவும் வீட்டை விட்டு வெளியே போயிற்று. இதுவரையில் இப்படி ஒருநாளும் இல்லாமையால், எங்கே போகிறதென்று எஜமானன் பார்த்துக் கொண்டு இருந்தான்; நாய் நேரே தன் பழைய சத்துருவினிடம் சென்று ஒன்றையொன்று மோந்து சிணுங்கி வாலாட்டி அப்புறம் இரண்டும் கூடிப் புறப்பட்டுத் தன் நாய் அன்றைக் கென்னவோ ஒரு புதுவழியாய் நடக்கிறதைக் கண்டான். சிலநாழிகை நேரம் அவை எங்கேயோ இருந்து திரும்பி வந்தபின்பு விசாரிக்கையில், இரண்டு மைல் தூரத்தில் இருந்த ஒரு கம்மாளன் வீட்டுத் துஷ்ட நாயண்டை இரண்டும் சென்று சிறிதுபொழுது அங்கிருந்து, அப்பால் மூன்றும் சேர்ந்து பட்டணமார்க்கமாய் ஓடித் திடீரென்று பிரவேசித்து மளிகைக் கடையருகில் கூடியிருந்த நாய்கள்மேல் உக்கிரமாய் விழுந்து கடித்து அவைகளைப் பலத்த காயப்படுத்தினவென்று தெரிய வந்தது.

அந்த முதலாவது நாய் தன் பகைஞனை எப்படிச்சமாதானம் பண்ணியிருக்கக்கூடும்? சமாதானம் பண்ணினதும், மூன்றாவது நாயை அது அறியவந்ததும், இரண்டும் கூடிக் கொண்டு மூன்றாம் நாயைத் தங்கள் ஆலோசனைக்குள் வசப்படுத்திக்கொண்டதும், பழிவாங்குதல் அதன் நோக்கம் என்று மற்ற நாய்களுக்குத் தெரிந்ததும், ஒன்றுக்கொன்று தங்கள் கருத்தைத் தெரிவிக்கிற வழி இருந்துதானே முடிந்திருக்கவேண்டும். பின்னும் இதில் அதிசயம் ஒன்று. அதாவது, முந்தின இரண்டு நாய்களும் இதற்குப் பிற்பாடு தங்கள் பகையைப் பழையபடி தொடுத்துக் கொண்டதனால், இன்ன காரணத்துக்காகச் சொற்பகாலம்மாத்திரம் சமாதானம் என்கிற ஏற்பாடு ஏதோ ஒருவகையால் அவைகளுக்கு அவகாசமாகி இருந்திருக்க வேண்டுமென்று நிச்சயிக்கவேண்டியது.

எறும்புக்கும் தேனீக்கும் முகத்தில் மிக்க மெல்லிய தும்பிகள் இருக்கின்றன; இவற்றை அவைகள் தம் தம் இனங்களினுடைய தும்பியில் பொருத்தித் தங்கள் அச்சம் குறை முதலியவற்றைத் தெரிவிக்கும்.

ஒரு துரை ஒரு குடுவைச் சர்க்கரைப் பாகைத் தம் பெட்டியில் வைத்திருந்து எறும்பு சேர்கிறது கண்டு அதை எடுத்துக் கயிறுகட்டி வீட்டின் முகட்டில் தூக்கிவைத்தார். அவர் கண்ணுக்குத் தப்பிக் குடுவையில் இருந்துவிட்ட ஓர் எறும்பு கொஞ்ச நேரத்தில் கயிற்றின் வழியாய் முகட்டுக்கேறி ஒரு வளைக்குத் துறைபிடித்து ஊர, அரை நாழிகை ஆகுமுன் அவ்வளையிலிருந்து எறும்புகள் கூட்டமாக வந்து மேற்கூரையை அடைந்து கயிற்றின் மார்க்கமாய்க் குடுவைக்குள் புகுந்து போதுமான மட்டில் குடித்துப் போயின. அவை திரும்பினபிறகு வேறொரு கூட்டம் சேர்ந்து அதைச் சாப்பிட்டுச் சென்று இவ்வாறாகக் குடுவையிலிருந்த பாகனைத்தும் ஆய்விடுகிறவரையில், மூன்றாவது நாலாவது கும்புகள் இறங்கி இறங்கி உண்டு மீண்டன. முன்னே தப்பி நின்ற அந்த ஓர் எறும்பல்லவா சர்க்கரைப்பாகு இருக்கிற செய்தியை அறிவித்து இவ்வொழுங்குகளை ஏற்படுத்தி நடப்பித்தது.

எறும்புப் புற்றைத் தகர்த்து ஒரு அறையில் இறைத்துவிட்டால், எறும்புகள் குறுக்கும் நெடுக்கும் பலபக்கம் ஓடி ஒன்றை ஒன்று சந்தித்துத் திரியும். ஏதாவதொன்றுக்கு நுழையக்கூடிய வெடிப்பு அகப்படுமாயின் நொடிக்குள்ளே மாறித் தும்பியால் சைகைசெய்து தன் கூட்டாளிகளுக்கு வளை இருப்பதைத் தெரிவித்து வழிகாட்டும்.

எறும்புகள் கூடிப் புற்றுக்கட்டுதல் முதலிய தொழில் நடத்தும்போதெல்லாம் ஒரு வகை மெதுவான சத்தம் பண்ணி ஒன்று உத்தரவு செய்யும் தலைவனாகத் தும்பியினால் தட்டித் தட்டி வேலையை நடத்தும். ஒரே வரிசையாய் நடக்கிற எறும்புகளுக்குச் சில அங்கங்கே அயலில் இருந்துகொண்டு தங்கள் தும்பிகளினால் தரையைப் பொறுத்துப் பொறுத்து அடிக்க, கூட்டம் முழுவதும் அதற்குச் சம்மதிக்கிற பாவனையாய் மேற்கூறியபடி மெதுவான இரைச்சலிட்டு விரைந்து ஏகும்.

எதிரிகளுடன் சண்டைசெய்ய ஆரம்பிக்கிற எறும்புகள் முந்தித் தங்கள் கூட்டத்தில் சிலவற்றை வேவுபார்த்து வரும்படி அனுப்பும்; அவை போய்ப் பார்த்துத் திரும்பின உடனே அவைகளும் முன்னேயிருந்த எறும்புகளும் ஒன்றை யொன்று தும்பிகளால் தொடும், இதனால் அவை சங்கதி யின்னதென்று தெரிந்துகொண்டு எல்லாம் சத்துரு இருக்கும் இடம் போய்ச் சேரும். சண்டை ஆரம்பித்துத் தங்கள் கும்பு போதாமையாய்த் தோன்றும்பட்சத்தில் புற்றுக்குத் தூதரை அனுப்பித் தங்கள் சகாயத்துக்குப் பின்னும் பின்னும் எறும்புகளை அவை வரவழைக்கும்.

மோசம் நெருங்கி வருகிறதென்று எந்த விதத்தினாலாவது முந்தி அறியும் எறும்புகள் தங்கள் கூட்டாளிகளுக்குத் தாமதமில்லாமல் ஏதோ குறிப்பினாலாவது சத்தத்தினாலாவது தெரிவிக்கும். அதைப் பார்த்தாகிலும் கேட்டாகிலும் கிரகித்துக்கொள்ளுகிற எறும்புகள் தக்ஷணமே புற்றுக்கு ஓட்டம் பிடிக்கும். கோபத்தையாவது பயத்தையாவது தெரிவிக்கவேண்டிய எறும்பு அரை வட்டமாய்ச் சுற்றிவந்து தன் அயலெறும்பையாவது விரோதியையாவது தன் தலையினாலாகிலும் வாயினாலாகிலும் அதன் பின்புறத்தில் இடிப்பது வழக்கம். பசியாயிருக்கிற ஒன்று புற்றுக்கு இரை கொண்டுபோகிற மற்றொன்றைத் தன் தும்பியினால் தொட்டு அவற்றைத் தீவிரமா யாட்டினால் அது இதற்குத் தின்னக் கொடுக்கும், அல்லது இரை இருக்கிற இடத்தையேனும் குறிப்பிக்கும். எறும்புகள் செய்யுமாறே தேனீக்களும் குளவிகளும் தும்பிகள் மூலமாய்ச் சம்பாஷித்து ஒன்றுக்கொன்று தங்கள் கருத்தை உணர்த்துகின்றன.

குஞ்சுகளை அழைக்கப் பெட்டைக்கோழி கொக்கரிக்கிற கொக்கரிப்பையும், இரை அகப்பட்டதென்று அறிவிக்க எடுத்தொலிக்குங் குரலையும் குஞ்சுகள் அறிந்து ஓடுவது எல்லோர்க்குந் தெரிந்தவை.

பூனை.

வீடுகளில் சஞ்சாரம் செய்கிற ஜெந்துக்களில் மிகவும் சாதாரணமானது பூனை. மிகுந்த திரவியவான்களின் வீடுமுதல் அதிக ஏழைகளின் வீடுவரையில் இந்த அழகானதும் உபயோகமுள்ளதுமான ஜெந்து இல்லாத வீடு இல்லை. பூனை வெகு எளிதில் திருப்தியடையும் பிராணி. பூனை படுத்திருக்

கையிலும், மாங்களி லேறும்போதும், இங்கு மங்கும் ஓடும்போதும் மிகவும் அழகாயிருக்கும். இதைவிட அழகாயிருப்பது இரண்டு மூன்று பூனைக்குட்டிகள் சேர்ந்து விளையாடுவது. அப்பொழுது அவைகள் மிகுந்த சுறுசுறுப்புடன் அவைகளின் உடம்பை விசித்திர விசித்திரமாகக் கோணல் கோணலாய் வளைப்பதின் அழகைப் பார்க்கும்போது துக்கத்தால் வாடிய முகத்திலும் ஒரு நகையுண்டாகும். வீடுகளில் பட்சத்துடன் வளர்க்கப்படும் பூனை மிகுந்த விசுவாசமும், கண்ணியமும், சாந்தமும் பொருந்தி யிருக்கும். வீடுகளில் வளர்க்கப்படும் ஜெந்துக்களுக்கும் வளர்ப்பாரின்றி பேவாரிசாய்த் திரிகிற ஜெந்துக்களுக்குமுள்ள பேதம் பூனைஜாதியில் விளங்குவதுபோல் மற்ற ஜெந்துக்களில் அவ்வளவு நன்றாய்த் தெரிகிறதில்லை. சில சமயங்களில் வீதிகளில் காணப்படுகிற ஆழ்ந்த கண்களையும் பயங்கரமான பார்வையையும் காடுமுரடான ரோமத்தையும் அசுத்தமுள்ள தோற்றத்தையுமுடைய பூனைகளுக்கும், வீடுகளில் பளபளப்பான தேகமும் அழகான தோற்றமுமமைந்த பூனைகளுக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. அப்படித் திரிகிற பூனைகளைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. அவைகளும் ஒருவேளை யாராலாவது வளர்க்கப்பட்டிருக்கவும் கூடும். பிறகு வளர்த்தவர்கள் வேறு இடங்களுக்குக் குடிபோக நேர்ந்து அப்பொழுது அவைகளை மறந்து விட்டுவிட்டுப் போனதினாலோ அல்லது அவைகள் கொண்டுபோகப்பட்டு வழி தப்பித் திரும்ப முன்னிருந்த வீட்டுக்கு வந்து பார்க்க அவைகளை வளர்த்தவர்கள் காணாமற்போய்விட்டதினாலோ இவ்வாறு திக்கற்று விட்டனபோலும். பூனை எலிகளையும் பறவைகளையும் பிடித்துத் தின்பதினால் அதற்கு வேறே ஆகாரம் வேண்டியதில்லை யென்று சிலர் தப் பபிப்பிராயங்கொண்டு தாங்கள் அதற்கு ஒருவித ஆகாரமுங்கொடுப்பதில்லை. அதனால் பூனைகள் வீடுகளில் வைத்திருக்கிற பால் நெய் தயிர் முதலியவற்றைத் திருட்டுத்தனமாய்க் குடித்துவிடுகின்றன. பூனைகளுக்கு எலிகளும் பறவைகளும் எப்போதும் அகப்படா. அவை அகப்படாத சமயங்களில் பூனைகளுக்குப் பசியெடுத்தால் வீடுகளில் சேகரித்து வைத்திருக்கிற உணவுகளைத் திருடித் தின்பதோடு, சில வீடுகளில் மிகவும் அன்போடு வளர்க்கப்படுகிற கிளி மைனாக் குருவி முதலிய பக்ஷிகளையுங் கொன்று தின்னும். ஆகையினால் பூனையினால் நமக்கு யாதொரு தொந்தரவுமில்லாமலிருக்க விரும்பினால் அதற்கு ஒருவேளையாவது நாம் உணவு கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் அது நமக்கு யாதொரு தொந்தரவும் கொடுக்காமலிருப்பதுடன் எலிகளின் உபத்திரவத்தையும் நீக்கும்.

பூனைகளை வளர்க்கிறவர்கள் அதைக் குளிப்பாட்டுகிறார்கள். அப்படிச் செய்யக்கூடாது. நாய்களைப்போல் பூனைகளுக்கு நாம் குளிப்பாட்டுவதில் பிரியமில்லை. அவைகளுக்குத் தாமே குளிப்பதில் வெகு இஷ்டம். நாம் குளிப்பாட்டாவிட்டாலும் பூனைகள் எப்பொழுதும் சுத்தமாய்த்தானிருக்கும். அவை நாள்தோறும் தீனி தின்றபிறகு தப்பாமல் தாமே குளிக்கின்றன. பூனைகளை நாம் குளிப்பாட்டினால் அவைகளின் ரோமத்தி னழகு குறைந்து அவைகளின் பார்வையும் கெட்டுப்போகும். சுத்தமான தண்ணீர் குடிப்பது பூனைகளுக்கு அவசியம். ஒரு பிரபு தான் வளர்த்துவந்த பூனைக்கு எவ்வளவு பால் கொடுத்தபோதிலும் பிறகு அது தண்ணீர் தப்பாமற் குடிப்பதைக் கவனித்திருக்கிறார்.

பூனைக்கும் பக்ஷிகளுக்கும் இயற்கைப் பகை யென்பது உண்மை. ஆயினும் நெடுநாளாய் ஒரேவீட்டில் வளர்ந்த பூனைக்கும் பறவைக்கும் நட்பும் அன்பும் உண்டாவதுண்டு. இங்கிலாந்து தேசத்தில் ஒரு துரைமகன் வீட்டில் அவருடைய கோழி குஞ்சுகளைப் பொரித்தவுடன் மாண்டுவிட்டது. அப்பொழுது அதேவீட்டில் வளர்ந்து வந்த பூனை யொன்று அக்குஞ்சுகளுக்குக் குளிர் உண்டாகாம லிருக்கும்படி அவைகளைத் தன் மார்பில் அணைத்து வைத்துக் கொண்டிருந்து அவைகளைக் காத்ததாம்.

அதே தேசத்தில் மற்றொரு துரைவீட்டில் ஒரு பூனையும் கனெரி (Canary) என்னும் ஒரு சாதிக்குருவியும் மிகவும் நேசமாக வளர்ந்துவந்தன. அப்படியிருக்கையில் ஒரு நாள் அந்தக் குருவி விளையாடிக்கொண்டிருக்கையில் திடீரென்று அந்தப் பூனை ஓடிவந்து அக்குருவியைக் கௌவிக்கொண்டு பரணையின்மேலேறிக்கொண்டது. வீட்டிலிருப்பவர்களெல்லாரும் ஓடிவந்து பார்த்து அன்று

அப்பூனைக்கு அக்குருவி இரையாகிவிட்ட தென்றே நினைத்து அதிக துக்கங்கொண்டு ஒன்றுந்தோன்றாமல் திகைத்து நின்றார்கள். சில நிமிஷங்களுக்கெல்லாம் புதிதாய் ஒரு பூனை வீட்டுக்குள் வந்து சுற்றிப் பார்த்துத் திரும்பிப் போய்விட்டது. அது போனவுடனே பரணைமேலிருந்த பூனை அந்தக் குருவியை வாயில் கௌவினபடியே கீழே யிறங்கி வந்து அதை விட்டுவிட்டது. குருவிக்கோ ஒரு அபாயமுமில்லை. அதன்பிறகுதான் வீட்டிலுள்ளவர்கள் தங்களுடைய பூனை குருவியைத் தின்பதற்காகப் போகவில்லை யென்றும், புதிதாய் வந்த பூனையை இது தூரத்திலிருந்தே பார்த்து அந்தப் பூனையினின்றும் குருவியைக் காப்பாற்றும்பொருட்டு இவ்வாறு செய்ததென் றறிந்து மிகவும் சந்தோஷமடைந்தார்கள்.

இப்படி அபூர்வமாய்ச் சில விடங்களிலிருக்கிறதே தவிர, இதைக்கொண்டு எவ்வளவு நட்பாய் வளர்ந்து வந்தபோதிலும் பூனையையும் பட்சிகளையும் ஓர் இடத்தில் விட்டுவைக்கக் கூடாது.

பூனைக்கும் நாய்க்கும் கூடப் பகையுண்டு. ஆனால் இந்தப் பகை அவ்வளவாய் ஊர்ஜிதமுடையதல்ல. இதை எளிதில் போக்கலாம்.

குழந்தைகளைப் பூனைக் குட்டிகளோடு தனியாய் விளையாட விடக்கூடாது. குழந்தைகள் விளையாட்டுத்தனமாய் அக்குட்டிகளை அழுத்துவதும் அவைகளின் வாலைப் பிடித்திழுப்பதுமான செயல்களைச் செய்வார்கள். அதனால் குட்டிகளுக்குத் தொந்தரவாயிருந்தால் அவை சீறி நகங்களினால் குழந்தைகளைக் கீறிவிடும். ஆகையால் குழந்தைகள் பூனைகளோடு விளையாடும்பொழுது அவர்களை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கால்நடைகளின் சம்ரக்ஷணை.

சென்ற ஜனவரி மாதத்தில் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் சமயவரம் என்னும் ஊரில் நடந்தேறின ஜந்துக்களின் காட்சியில் சுற்றுப் புறங்களிலுள்ள கிராமங்களிலிருந்தும் மைசூர் ராஜ்ஜியத்திலிருந்தும் அநேகங் கால்நடைகள் கொண்டுவரப்பட்டன. அவைகளெல்லாவற்றிலும் மைசூரிலிருந்து கொண்டுவரப்பட்டவை மிகவும் நேர்த்தியாயிருந்தன. அக்காட்சிக்கு அக்கிராசனாதிபதியாயிருந்த மிஸ்டர் டால்ரிம்பில் ஹே என்னும் துரையவர்கள் கால்நடைகளின் சம்ரக்ஷணையைப் பற்றி முந்திய வருஷங்களில் செய்த உபந்நியாசங்களின் தொடர்ச்சியாய்ச் சில விஷயங்களை யெடுத்துக் கூறினார். அவைகளாவன, "பசுக்களை யடிக்கடி கன்றீனும்படிச் செய்வது அவைகளுக்கு மிகவும் கெடுதியை விளைவிக்கும். பசுக்களின் பால்மடியைப் பற்றி அதிக ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டும். ஈனுவதற்குமுன் பசுவுக்கு மடி தடித்து அதனால் அசௌக்கியமாயிருக்கிற தென்று தெரிந்தால் அப்பொழுதே பாலைக் கறந்துவிடுதலே நலம். அந்த வீக்கத்தைக் குறைக்காவிட்டால் பசுவுக்குத் துன்பமதிகமாகி ஈனுஞ்சமயத்தில் அது சாந்தமாயிருப்பதைவிட்டு முரட்டுத்தனமடையும். ஈன்றவுடனே பாலைக் கறந்து அந்தப் பாலைப் பசுவுக்குக் கொடுக்கவேண்டும். அது பசுவுக்குப் பலத்தைக் கொடுக்கும். பிறகு கன்று எழுந்து தனக்கு வேண்டிய பாலை அருந்தும். அதன் பிறகு பசுவுக்குத் தவிடு வைக்கலாம். ஆனால் அதிகக் குளிர்ச்சியான ஜலம் விட்டுக் கலக்கக்கூடாது. சிலநாள்வரையில் முதலில் பாலைக் கறந்து பசுவுக்குக் கொடுத்துக்கொண்டே வந்தால் மிகவும் நல்லது. பசுக்களின் மடியைப்பற்றி முக்கியமாய் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் ஈன்றபிறகு பால் மறுத்து அதனாலுண்டாகிற பலவிதத் துன்பத்திற்குள்ளாகிற பசுக்களின் தொகை அதிகம். பசுவின் மடியானது கடற் பஞ்சைப்போல் மென்மையானதும் துவாரம் நிறைந்ததுமான வஸ்துவானதால் அதை மிருதுவாய்க் கையாள வேண்டும். சில ஜனங்கள் முரட்டுத்தனமாய்க் கறப்பதினால் அந்தப் பையைக் காலி செய்து விடுகிறார்கள். அதனாலொருவித நமைச்சல் உண்டாகி அதன் துவாரங்களிலெல்லாம் ஒருவித அடைப்புண்டாகிறது. இதற்குச் செய்யவேண்டிய தென்னவென்றால், பால் சுரப்புக்காகக் காற்றை ஏற்றும் யந்திரத்தை வாங்கி, மடியின் எந்தப் பக்கத்தில் அடைப்புண்டாயிருக்கிறதோ அந்தப் பக்கத்தின் முலைக்காம்பில் அந்த யந்திரத்தை மாட்டி, அதன்வழியாய்க் கொஞ்சம் காற்றை யேற்றவேண்டும். பிறகு, அக்காற்று மடி முழுதும் பரவும்படிக் கைகளினால் மெது

வாய்த் தடவிக் கொடுக்கக் கொடுக்க உள்ளே சிறு கொப்புளங்கள் வெடிக்கிற சத்தம் நன்ருய்க் கேட்கும். இப்படி இரண்டு அல்லது மூன்று முறை செய்தால் அவை யெல்லாம் வெடித்துச் சௌக்கியமாகும். இந்த யந்திரம் சொற்ப விலைக்குக் கிடைப்பதால் பிரதி கிராமத்திலும் ஒன்று அல்லது இரண்டு யந்திரங்களை வாங்கி வைப்பது நலம்."

இந்தப் பிரசங்கத்தி னிறுதியில் மேற்சொன்ன துரையவர்கள் அந்த ஜில்லாவி லிருப்பவர்கள் குதிரைகளின் அபிவிருத்தியைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்றும், கவர்ன்மெண்டாரால் அனுப்பப்பட்ட அரபி ஜாதியான மட்டமொன்று வெடரினெரி ஹாஸ்பிடலில் இருக்கிறதென்றும், அதைக் கொண்டு அந்த ஜில்லாவினுள்ள குதிரைகளின் சந்ததியை விருத்தி செய்யலாமென்றும், தற்காலம் ஒரு நல்ல குதிரை வேண்டுமானுல் சென்னைக்குச் சென்று 500 ரூபாய்களுக்குமேல் செலவழித்து வாங்குவதைவிட்டு, அந்த ஊரிலேயே ரூ. 300-க்குள் நல்ல குதிரையை வாங்கக் கூடுமென்றும் சொன்னுர்.

கடைசியாகத் துரையவர்கள் தான் இந்தக் காட்சிக்கு மூன்று வருஷங்களாக அக்கிராசனம் வகித்ததற்காகவும் வருஷத்துக்கு வருஷம் இவ்விதக் காட்சிகளில் ஜனங்களுக்கு அதிக ஊக்க முண்டாயிருப்பதற்கும் தனக்குள்ள சந்தோஷத்தை வெளிப்படுத்தி, இவ்வித ஊக்கம் இன்னு மதிகரிக்கும் பொருட்டே, நல்ல குதிரைகளைக் கொண்டுவருபவர்க்கும் நல்ல எருதுகளைக் கொண்டுவருபவர்க்கும் கவர்ன்மெண்டு கீர்த்தி முத்திரைப் பதக்கங்களை யளிக்கவேண்டுமென்று டிஸ்திரிக்டு போர்டு பிரெஸிடெண்டுக்கு எழுதி அவருடைய அனுமதியைப் பெற்ருரென்றும் சொன்னுர். இவ்வருஷத்தில் இந்தப் பதக்கங்கள் நல்ல குதிரைக்காக பிச்சாண்டார் கோவில் மிராசுதாரரான ம-ா-ா-ஸ்ரீ ஆவுடைப்பிள்ளை யென்பவர்க்கும், நல்ல எருதுக்காக தருமபுரி தாலுக்காவைச் சேர்ந்த மட்டம்பட்டியிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ அங்குசெட்டி யென்பவருக்கும் அளிக்கப்பட்டன.

பிரயாணம் போகும் பறவைகள்.

பக்ஷிகளைத் தூரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறவர்கள் அவைகளை மூங்கில் கூடுகளில் அடைத்து மேற்புறத்திலும் பக்கங்களிலும் மூடப்படாமல் திறந்தவண்ணமாய் அனுப்புகிற வழக்கம் மிகவும் கொடியது. அக்கூடுகளில் அவைகளுக்கு நிழலிருக்கும்படியாய் ஒரு பக்கத்திலாயினும் கறுப்பு நிறமுள்ள எந்த வஸ்துவினுலாவது ஒரு மறைவு போடவேண்டும். சிலர் ஒரே கூட்டில் அநேகம் பக்ஷிகளை யடைத் தனுப்புகிருர்கள். அவை யொன்ருேடொன்று சண்டையிட்டு ஒன்றை யொன்று குத்திக் காயப்படுத்துவதுமன்றி, அவைகளுக்கு நோய்கள் உண்டாகி அவைகளின் இயற்கை ரூபமே மாறி அவைகளின் அழகும் குறைந்துவிடும். பக்ஷிகளை விற்கிறவர்கள், நோயுற்ற அநேகம் பறவைகளைக்காட்டிலும் தேக சௌக்கியத்தோடு கூடிய சில பறவைகளே உயர்ந்த விலைக்கு விற்பனை யாகுமென்பதை மனதிற் கொள்ள வேண்டும். கூடுகளும் அதில் தீனிவைக்கிற பாத்திரங்களும் அதிக சுத்தமாயும் உலர்ந்துமிருக்கவேண்டும். தீனியும் தண்ணீரும் வைக்கப்படுகிற பாத்திரங்களைத் தினந்தோறுமெடுத்துக் கழுவவேண்டும். அப்பாத்திரங்களைப் பக்ஷிகள் உட்காருகிற இடங்களுக்கு நேர் கீழாக விருக்கும்படி வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் அவைகளின் ஜல மலங்கள் அதில் விழும். கூடுகளின் அடியில் வாள்தூளையாவது சாம்பலையாவது தெளித்து வைக்கவேண்டும். எல்லாப் பட்சிகளுக்கும் சுத்தமான ஜலம் வைத்திருக்கவேண்டும். அல்லது ஒரு கிச்சிலிப்பழத்தைக் கம்பியினுல் கட்டித் தொங்கவிட்டு அதில் சிறிய பாகத்தை உரித்து வைத்துவிட்டால் பக்ஷிகள் வேண்டும்போது அதன் ரசத்தை யுறிஞ்சிக் குடிக்கும்.

பறவைகள் கூடுகளில் அமைதியாயிருக்கும்பொருட்டுச் சிலர் அவைகளின் இறகுகளைப் பின்னுக்கு இறுக்கிக் கட்டிவைக்கிருர்கள். இந்தக் குரூரமான வழக்கத்தை நிறுத்தவேண்டும். பறவைகளின் இறகுகளைக் குறுக்கவேண்டிய தவசியமாயிருந்தால் அவைகளின் ஓரங்களைச் சிறிது கத்தரித்து விடலாம். அதனுல் தோஷமில்லை; ஏனென்ருல் அவை உதிர்ந்தபிறகு மறுபடி

முன்போலவே முளைக்கும். இப்படிக்கன்றி அவைகளை இறுக்கிக் கட்டிவைப்பதினால் பறவைகளுக்குத் துன்ப முண்டாவதுடன் அவைகளின் இயற்கை ரூபமும் மாறிவிடும்.

சமாசாரக் குறிப்புகள்.

1. **பழகிய நாய்கள்.**—ஜர்மனி தேசத்து இராணுவங்களில் பிணத்தைக் கண்டால் குரைக்கும்படி நாய்களைப் பழக்கியிருக்கிறார்களாம். இவ்வாறு பழக்கப்பட்ட நாய்கள், எங்கேயாகிலும் பிணம் இருப்பதைக் கண்டால் கொஞ்சநேரம் குரைக்கின்றனவாம். அதற்குள் யாரும் வராவிட்டால் அப்பிணத்தின் தொப்பியையோ அல்லது வேறு ஏதாகிலும் சிறிய வஸ்துவையோ கௌவிக்கொண்டு தம்மை வளர்த்தவர்களிடம் சென்று அவர்களை அப்பிணத்தண்டை அழைத்துக்கொண்டு போகின்றனவாம். காயப்பட்டவர்கள் இந்நாய்களிடத்தில் தங்கள் தொப்பியைக் கொடுத்து அனுப்புவதினால் மேலே சொன்னபடி இவர்களுக்கும் உதவி கிடைக்கிறதாம்.

2. **சென்னை ஜீ. ஹி. நி. சங்கம்.**—இச்சங்கத்தில் பிரதி வருஷமும் பாடசாலை மாணக்கர் எழுதும் வியாசங்களுக்கு அளிக்கும் வெகுமதிகளுக்காக மூலதனமாய் ரூ. 500—0—0க்குக் கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டு ஒன்றை ம-ா-ா-ஸ்ரீ ம. அ. பார்த்தசாரதி ஐயங்கார், பி. ஏ., பி. எல். அவர்கள் கொடுத்தார். இந்த உதார நன்கொடைக்காக அவருக்கு இச்சங்கத்தின் காரியதரிசி அநேக வந்தனங்களைச் செலுத்துகின்றார்.

3. **ஓர் பெருத்த முதலை.** — சிங்கப்பூரில் போராக்நதியில் சில வாரங்களுக்குமுன் சில மலேயச் செம்படவரை யிழுத்துக்கொண்டு போய்விட்ட 'புயாயாகிரமத்' என்னும் முதலையைப் பிடித்துவிட்டார்களாம். அதன் நீளம் 18 அடி யென்றும், இடையின் சுற்றளவு விபரீதமானதென்றும், அதன் வயது சுமார் 100 வருஷங்களிருக்குமென்றும் 'சிங்கப்பூர் பிரீ பிரெஸ்' என்னும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

4. **நாய் பணம் வசூல் செய்தல்.**—சில வருஷங்களுக்குமுன் லண்டன் தென்மேற்கு இருப்புப்பாதை கம்பெனியில் வேலையாயிருந்த உத்தியோகஸ்த ரொருவர், தர்ம கைங்கரியங்களுக்காகப் பணம் வசூல் செய்ய ஜாக் என்னும் தன்னுடைய நாயை அனுப்பிக்கொண்டிருந்தாராம். அந்த நாய் தன் முதுகின்மேல் ஒரு உண்டிப் பெட்டியை வைத்துக்கொண்டு பெரிய ரெயில்வே ஸ்டேஷன்களில் திரிந்து பணம் வசூல் செய்யுமாம். அது வருஷந்தோறும் வசூலித்து வந்த பெருந்தொகைகளை அந்த உத்தியோகஸ்தர் பல வைத்தியசாலைகளுக்கும் அநாதப் பிள்ளைகளை வளர்க்கும் மடங்களுக்கும் விநியோகம் செய்துவந்தாராம்.

5. **சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்தின் 29-வது** வருஷாந்த மஹாசபை சென்ற மார்ச்சு மாதம் 16-ந் தேதியன்று வழக்கம்போல் சென்னை மவுண்ட்ரோட்டிலுள்ள பியாங்கு வெட்டிங் ஹாலில் மாட்சிமைதங்கிய நம் கவர்னரவர்களின் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. அச்சமயம் அநேகம் இந்திய ஐரோப்பிய கனவான்கள் வந்திருந்தனர். சபையின் சென்ற வருஷத்திய ரிப்போர்ட்டில் கண்ட சங்கதிகளைப்பற்றியும், இச்சங்க அங்கத்தினர்கள் அதி ஊக்கத்தோடும் விடா முயற்சியுடனும் உழைத்துவருவதைப்பற்றியும், ஜீவகாருண்யத்தைப்பற்றியும் ஆன்னி பெசண்ட் அம்மையவர்களும், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜிகளாகிய கனம்: அப்துர் ரஹீம் சாயபு அவர்களும், கனம்: வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களும், மற்றும் சிலரும் பிரசங்கித்தார்கள். பின்னர் கவர்னர் அவர்கள், ஜீவகாருண்ய விஷயமாய் வியாசங்களை எழுதி இச்சங்கத்துக்கனுப்பின மாணக்கர்களுக்குப் பொன் வெள்ளிப் பதக்கங்களை வெகுமதிகளாக அளித்துத் தாமும் சங்கத்தின் விஷயமாக அரியதோர் பிரசங்கம் செய்து சபையை முடித்தனர்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1910.